## March 31, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பரிமாற்றங்களுக்கானசுங்க வரித் தடையை நீட்டிப்பதில் உலக வர்த்தக அமைப்பின் 14-ஆவது அமைச்சர்கள் மாநாட்டில் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை.

(i) கேமரூன் தலைநகர் யாவுண்டேவில் கடந்த 4 நாள்களாக நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இந்த வரி விலக்கை நிரந்தரமாக்க முயற்சித்தன. இருப்பினும், இந்தியா உள்பட வளரும் நாடுகளின் கடும் எதிர்ப்பால் இறுதி முடிவு எடுக்கப்படாமலேயே மாநாடு நிறைவடைந்தது.

(ii) கடந்த 1998 முதல் இந்த வரி விலக்கு நடைமுறை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை தடையின்றி நீட்டிக்கப்பட்டு வந்தது. தற்போதைய காலக் கெடு இம்மாத இறுதியுடன் முடிவடைகிறது. தற்போது உலகளாவிய சேவை ஏற்றுமதியில் மின்னணு வர்த்தகம் 50 சதவீதத்துக்கும் மேல் பங்களிக்கும் நிலையில், இந்த இழுபறி எண்ம வர்த்தக உலகில் பெரும் நிச்சயமற்ற சூழலை உருவாக்கியுள்ளது.

(iii) இது குறித்து உலக வர்த்தக அமைப்பின் தலைமை இயக்குநர் என்ஜோசி ஒகோன்ஜோ இவாலா கூறுகையில், 'நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நெருங்கிய பிறகு, இந்த முயற்சிகள் தோல்வியில் முடிவதையாரும் விரும்பமாட்டார்கள். எனவே, விடுபட்டுப்போன விவாதங்கள் குறித்து ஜெனீவா தலைமையகத்தில் பேச்சுவார்த்தை தொடரும்' என்றார்.

2. இஸ்ரேலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான அரசு, நாடாளுமன்றத்தில் தனது வருடாந்திர பட்ஜெட்டை வெற்றிகரமாக நிறைவேற்றியது.

(i) ஏப். 1-ஆம் தேதிக்குள் பட்ஜெட் நிறைவேற்றப்படாவிட்டால், ஆட்சி கவிழ்ந்து முன்கூட்டியே தேர்தலைச் சந்திக்க வேண்டிய சூழல் இருந்த நிலையில், விடிய விடிய நடைபெற்ற விவாதங்களுக்குப் பிறகு இந்த பட்ஜெட் ஒப்புதல் பெற்றது. இதன்மூலம், நெதன்யாகு அரசு தனது பதவிக்காலத்தை முழுமையாக நிறைவு செய்யும்.

3. இளைஞர்கள் போராட்டத்தை ஒடுக்கும் வன்முறையில் 76 பேர் உயிரிழந்த விவகாரத்தில் கைதாகியுள்ள நேபாள முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலிக்கு இடைக்கால நிவாரணம் வழங்க அந்நாட்டு உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

(i) கே.பி.சர்மா ஒலியின் கைது சட்டவிரோதமானது எனக் கூறி அவரது மனைவி தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவில் இடைக்கால உத்தரவைப் பிறப்பிக்க மறுக்கப்பட்டதுடன், கைதுக்கான சட்டபூர்வ காரணங்கள் குறித்து அரசிடம் விளக்கம் கோரப்பட்டது.

(ii) இதேபோல், முன்னாள் உள்துறை அமைச்சர் ரமேஷ் லெகாக் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவையும் நீதிமன்றம் நிராகரித்தது.

4. மியான்மரில் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கவிழ்த்துவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றிய ராணுவத் தளபதி மின் ஆங் லயிங் தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

(i) மியான்மரில் கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ராணுவ ஆதரவு பெற்ற யுஎஸ்டிபி கட்சி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட நிலையில், இந்த ஜனநாயக வெற்றி மூலம் நாட்டின் அடுத்த அதிபராக பொறுப்பேற்கும் முயற்சியில் மின் ஆங் லயிங் இம்முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

(ii) எனினும், மியான்மர் பொதுத் தேர்தலை 'ஏமாற்று வேலை' எனவும், ராணுவ ஆட்சிக்கு ஒரு ஜனநாயக முகமூடி அணிவிக்கும் முயற்சி எனவும் ஐ.நா. மற்றும் மேற்கத்திய நாடுகள் விமர்சித்தன.

(iii) இந்நிலையில், அண்மையில் நடைபெற்ற அந்நாட்டு நாடாளுமன்ற கீழவைக் கூட்டத்தில் மின் ஆங் லயிங் துணை அதிபர் வேட்பாளராக முன்மொழியப்பட்டார். மியான்மர் அரசியல் சாசனப்படி,

நாராளுமன்றத்தின் இரு அவைகளும் தலா ஒரு துணை அதிபர் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும்.

(iv) பின்னர், இருவரில் ஒருவரை அதிபராகத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு நடைபெறும். இந்த நடைமுறைகள் அனைத்தும் மின் ஆங் லாயிங் அதிபராவதை உறுதி செய்யும் வகையிலேயே திட்டமிடப்பட்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

(v) மின் ஆங் லயிங், தனது நம்பிக்கைக்குரிய தளபதியான யே வின் ஓவிடம் ராணுவத் தளபதி பதவியை ஒப்படைத்துள்ளார். 2020 முதல் உளவுத்துறை பிரிவின் தலைவராக இருந்த யே வின் ஓ, களப்பணியில் போதிய அனுபவம் இல்லாதவர் என்ற விமர்சனம் எழுந்தபோதிலும், மின் ஆங் லயிங்கின் தீவிர விசுவாசி என்பதால் இந்தப் பொறுப்பை பெற்றுள்ளார்.

(vi) பின்னணி:

- கடந்த 2021-ல் ஆங் சான்சூகி (80) தலைமையிலான மக்களாட்சியை கவிழ்த்துவிட்டு, ராணுவம் ஆட்சியைக்கைப் பற்றியது முதல், மியான்மரில் உள்நாட்டுப் போர் நிலவி வருகிறது. இந்த மோதல்களில் இதுவரை சுமார் 93,000 பேர் உயிரிழந்துள்ளனர்; 36 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வீடுகளை இழந்தனர்.

5. 2025- ஆம் ஆண்டுக்கான சிறந்த பாரா வில்வித்தை வீராங்கனையாக இந்தியாவின் ஷீத்தல் தேவியை உலக வில்வித்தை அமைப்பு அறிவித்துள்ளது.

6. அமெரிக்காவில் நடைபெற்ற மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இத்தாலியின் யானிக் சின்னர் சாம்பியன் கோப்பை வென்றார்.

(i) இரு வாரங்களுக்கு முன் இண்டியன் வெல்ஸ் ஓபனிலும் வாகை சூடிய சின்னர், 'சன்ஷைன் டபுள்' பட்டம் வென்ற பெருமைக்குரியவர் ஆனார்.

(ii) ஆண்டின் முதல் இரு மாஸ்டர்ஸ் போட்டிகளாக அடுத்தடுத்து நடைபெறும் இண்டியன் வெல்ஸ்ஓபன்,மியாமி ஓபன் என, இரண்டிலுமே ஒரே சீசனில் சாம்பியனாவது 'சன்ஷைன் டபுள்' என்று அழைக்கப்படுகிறது.

(iii) கடந்த 9 ஆண்டுகளில் அந்தப் பெருமை பெற்ற முதல் வீரர் ஆகியிருக்கிறார் சின்னர். கடைசியாக சுவிட்ஸர்லாந்து நட்சத்திரம் ரோஜர் ஃபெடரர் 'சன்ஷைன் டபுள்' வென்றிருந்தார்.

(iv) முன்னதாக, ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில் உலகின் 2-ஆம் நிலை வீரரான சின்னர் போட்டித் தரவரிசையில் 21-ஆம் இடத் திலிருந்த செக் குடியரசின் ஜிரிலெஹெக்காவை வீழ்த்தினார்.

7.திவால் சட்டத் திருத்த மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

(i) திவால் சட்டம் 2016-இல் அமலுக்கு வந்தது. அதில் 12 திருத்தங்கள் மேற்கொள்வதற்கான திவால் (திருத்த) மசோதா, 2025 மக்களவையில் நிறைவேற்றப்பட்டதாக தேர்வுக் குழு தெரிவித்தது.

(ii) கடந்த ஆண்டு ஆகஸ்ட் 12-ஆம் தேதி இந்த மசோதா மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில், டிசம்பரில் தேர்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டது.

(iii) இதையடுத்து, இந்த மசோதா மீது மக்களவையில் நடைபெற்ற விவாதத்தின்போது பேசிய நிர்மலா சீதாராமன், வங்கித் துறை மற்றும் செயல்படாத சொத்துகளை மீட்பதில் முக்கியத் தூணாக இந்தச் சட்டம் விளங்குகிறது.

(iv) பல்வேறு விதிகளின்கீழ் வங்கிகளுக்கு ரூ.1.04 லட்சம் கோடி திருப்பி செலுத்தப்படாத கடன்கள் வசூலிக்கப்பட்டுள்ளன. அதில் திவால் சட்டம் மூலம் ரூ.54,528 கோடி (52.3 சதவீதம்) மீட்கப்பட்டுள்ளன என்றார்.

8. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் மண்ணெண்ணெய் விநியோகம்

படிப்படியாக நிறுத்தப்பட்ட 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு தற்காலிக அடிப்படையில் மீண்டும் மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை மேற்கொள்ள மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

(i) மேற்காசிய போரின் தாக்கத்தால் சமையல் எரிவாயு (எல்பிஜி) கொள்முதலில் நெருக்கடி எழுந்துள்ள நிலையில், வீடுகளில் சமையல் மற்றும் விளக்கு எரிக்கும் தேவைகளுக்காக மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ii) இந்தியா தனது சமையல் எரிவாயு தேவையில் 60 சதவீதத்தை இறக்குமதி மூலமே பூர்த்தி செய்கிறது. இதில் 85 முதல் 90 சதவீத எரிவாயு வளைகுடா நாடுகளில் இருந்து கொள்முதல் செய்யப்படும் நிலையில், அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போரால் எரிபொருள் விநியோகச் சங்கிலி தடைபட்டுள்ளது.

(iii) கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதிக்கு முக்கிய வழித்தடமான ஹோர்முஸ் நீரிணை முடக்கத்தால் பல்வேறு நாடுகளிலும் பெட்ரோல்- டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

(iv) இந்தியாவைப் பொருத்தவரை வணிகப் பயன்பாட்டு சமையல் எரிவாயு விநியோகத்தைக் குறைக்கும் நிலை ஏற்பட்டது. அதேநேரம், வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர்களின் சீரான விநியோகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இருப்பினும், எரிவாயு சிலிண்டர் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பீதியில் முன்கூட்டியே பதிவு செய்து, எரிவாயு விநியோக மையங்களில் மக்கள் காத்திருக்கும் நிலை தொடர்கிறது.

(v) மீண்டும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு:

- இந்தச் சூழலில், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் மண்ணெண்ணெய் விநியோகம் படிப்படியாக நிறுத்தப்பட்ட உத்தர பிரதேசம், குஜராத், மத்திய பிரதேசம், ஹரியாணா, பஞ்சாப், கோவா, ராஜஸ்தான், சண்டீகர், தில்லி உள்ளிட்ட 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு தற்காலிக அடிப்படையில் மீண்டும் மண்ணெண்ணெய் ஒதுக்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது.
- இந்த மாநிலங்களில் எல்பிஜி இணைப்புகள் விரிவாக்கம் முழு அளவில் எட்டப்பட்ட காரணத்தால் மண்ணெண்ணெய் விநியோகம் இல்லை என்ற அந்தஸ்தைப் பெற்றவையாகும்.
- தற்போதைய உலகளாவிய நிலவரத்தைக் கருத்தில்கொண்டு, எல்பிஜி விநியோகம் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் நோக்கில் மீண்டும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகிறது.

(vi) மத்திய அரசு அறிவிக்கை:

- இந்த மாநிலங்கள்-யூனியன் பிரதேசங்களுக்கு பெட்ரோலிய சட்டம்-1934, பெட்ரோலிய விதிமுறைகள்-2002 ஆகியவற்றின்கீழ் தற்காலிக விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சக அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களுக்குச் சொந்தமான தலா 2 பெட்ரோல் நிலையங்கள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்படும். இந்த பெட்ரோல் நிலையங்களில் பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு நிபந்தனைகளுடன் 5,000 லிட்டர் வரை மண்ணெண்ணெய் இருப்பு வைக்க அனுமதிக்கப்படும்; அடுத்த 60 நாள்கள் அல்லது மறு அறிவிக்கை வெளியிடப்படும் வரை இந்த உத்தரவு அமலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. மக்கள்தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டமாக வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புப் பணி புதன்கிழமை (ஏப்.1) தொடங்கப்பட உள்ளது. இதில் பொதுமக்களிடம் கேட்கப்படவுள்ள 33 கேள்விகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

(i) மக்கள்தொகை கணக்கெடுப்பு வலைதளத்தில் (சென்சஸ்) பொதுமக்கள் தாமாகவே தகவல்களை

பூர்த்தி செய்யும் வசதியும் தொடங்கப்பட்டது. தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட 16 மொழிகளில் இணையத்தில் இந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ii) மக்கள்தொகை கணக்கெடுப்பு அறிவிப்பை கடந்த ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசு வெளியிட்டது. முதல் கட்டமாக வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புப் பணி நிகழாண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி வரை செம்டம்பர் 30-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

(iii) தில்லி மற்றும் கோவா, கர்நாடகம், சிக்கிம், ஒடிஸா உள்ளிட்ட சில மாநிலங்களில் ஏப்.1-ஆம் தேதி தொடங்கி 15-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

(iv) அதன்பிறகு இரண்டாம் கட்டமாக 2027-ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. மக்கள்தொகை கணக்கெடுப்புடன் ஜாதிவாரி கணக்கெடுப்பும் சேர்த்து நடத்தப்பட உள்ளது.

(v) இந்தக் கணக்கெடுப்பின்போது பொதுமக்களிடம் கேட்கப்படும் 33 முக்கியக் கேள்விகளை மத்திய அரசு வெளியிட்டது. பொதுமக்களின் ஐயங்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் இவை வெளியிடப்பட்டுள்ளன.

(vi) 'லிவ்-இன்' தம்பதிகள் பதிவிடுவது எவ்வாறு?

- லிவ்-இன் (திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்வது) உறவில் இருக்கும் தம்பதிகள் திருமணமானவர்களாக கருதப்படுவார்களா என்ற கேள்விக்கு லிவ்-இன் தம்பதிகள் தங்கள் உறவு நிலையானது என நினைத்தால் அவர்கள் திருமணமான தம்பதிகளாக கருதப்படுவதாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.
- இதுதவிர வீடுகளின் கட்டுமானத்துக் குப் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள் கள், வீட்டில் வசிக்கும் திருமணமான தம்பதிகளின் எண்ணிக்கை, வீட்டுத் தலைவரின் பாலினம், பயன்படுத்தும் வாகனங்கள் உள்ளிட்ட கேள்விகள் மக்கள்தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டத்தில் கேட்கப்படவுள்ளன.

(vii) தனிப்பட்ட தகவல்களை திட்டங்க ளுக்குப் பயன்படுத்தக் கூடாது:

- மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது பெறப்படும் தனிப்பட்ட தகவல்களை அரசுத் திட்டங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என இந்திய பதிவுத் துறை மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையர் மிருத்யுஞ்ஜயகுமார் நாராயண் தெரிவித்தார்.
- இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறியதாவது: மக்கள்தொகை கணக்கெடுப்புக்காக பெறப்படும் தகவல்களை, அரசு அல்லது தனியார், நீதிமன்றத்தில் ஆதாரம், தகவல் அறியும் உரிமைச் சட்டம் என எதற்காகவும் வெளியில் பகிரக் கூடாது.
- எனவே, மக்களிடம் பெறும் தகவல்களை மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடும் அதிகாரிகள் மிக கவனமாக பாதுகாக்க வேண்டும்.

(viii) 2027-இல் பல்வேறு தரவுகள் வெளியீடு:

- முதல்முறையாக எண்ம முறையில் பொதுமக்கள் தாமாகவே தங்களது தகவல்களை சமர்ப்பிக்கும் வசதி அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- இதன் காரணமாக 2027-ஆம் ஆண்டி லேயே சில தகவல்களை வெளியிட முடியும். மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது எவ்வித ஆவணத்தையும் பொது மக்கள் சமர்ப்பிக்கத் தேவையில்லை.
- தேசிய மக்கள்தொகை பதிவேட்டை மேம்படுத்துவது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை. இந்திய தேர்தல் ஆணையத்தின் சிறப்பு தீவிர திருத்தத்துக்கும் தேசிய மக்கள்தொகை பதிவேட்டுக்கும் தொடர்பில்லை என்றார்.

(ix) தமிழகத்தில் நிகழாண்டு ஜூலை 17 முதல் ஜூலை 31 வரை மக்கள்தொகை கணக்கெடுப்பு

வலைதளத்தில் பொதுமக்கள் தங்கள் தகவல்களை தாமாகவே பதிவிடலாம். அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணி ஆகஸ்ட் 1 முதல் ஆகஸ்ட் 30 வரை நடைபெறவுள்ளது. மேற்கு வங்கத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துவது குறித்து எவ்வித அறிவிக்கையும் வெளியிடப்படாதது குறிப்பிடத்தக்கது.

10. NASA-வின் Artemis II விண்வெளிப் பயணம்

(i) வரலாற்றுப் பின்னணி

- 54 ஆண்டுகால இடைவெளி: 1972-க்குப் பிறகு மனிதர்கள் நிலவின் மேற்பரப்பிற்குப் பயணம் செய்வது இதுவே முதல் முறையாகும்; இதன் மூலம், மனிதர்கள் பயணிக்கும் நிலவு ஆய்வில் ஏற்பட்ட 54 ஆண்டுகால இடைவெளி முடிவுக்கு வருகிறது.
- Artemis I (நவம்பர் 2022): இந்தத் திட்டத்தின் முதல் கட்டம், மனிதர்கள் இல்லாத ஒரு சோதனைப் பயணமாக வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.
- பெயர்க்காரணம்: நிலவுக்கான கிரேக்கக் கடவுளும், Apollo-வின் இரட்டைச் சகோதரியுமான "Artemis"-இன் பெயரால் இத்திட்டம் அழைக்கப்படுகிறது. இது முந்தைய Apollo பயணங்களின் மரபை மதிக்கும் அதே வேளையில், எதிர்காலத்தை நோக்கிய பார்வையும் கொண்டுள்ளது.

(ii) Artemis II விண்வெளிப் பயணம் (ஏப்ரல் 2026)

- இப்பயணம் ஏப்ரல் 1, புதன்கிழமை அன்று (அமெரிக்க நேரப்படி மாலை 6:24 மணிக்கு) விண்ணில் ஏவப்பட உள்ளது; இது இந்திய நேரப்படி ஏப்ரல் 2, அதிகாலை 3:54 மணிக்குச் சமமாகும்.
- இப்பயணம், Florida-வில் அமைந்துள்ள Kennedy விண்வெளி மையத்திலிருந்து விண்ணில் ஏவப்பட உள்ளது.
- Orion விண்கலத்தை நான்கு விண்வெளி வீரர்கள் இயக்குவர்:
- தளபதி Reid Wiseman: இப்பயணத்தை வழிநடத்தும் அமெரிக்கக் கடற்படை விமானி.
- விமானி Victor Glover: நிலவுப் பயணத்தில் பங்கேற்கும் முதல் கறுப்பின விண்வெளி வீரர்.
- பயணச் சிறப்பு நிபுணர் Christina Hammock Koch: நிலவிற்குச் செல்லும் முதல் பெண் இவர்; மேலும், ஒரு பெண் மேற்கொண்ட மிக நீண்ட தொடர் விண்வெளிப் பயணத்திற்கான (328 நாட்கள்) சாதனையையும் இவர் தன்வசம் வைத்துள்ளார்.
- பயணச் சிறப்பு நிபுணர் Jeremy Hansen: கனடிய விண்வெளி முகமையைப் (CSA) பிரதிநிதித்துவப்படுத்தும் இவர், நிலவுப் பயணத்தில் இணையும் முதல் அமெரிக்கர் அல்லாத விண்வெளி வீரர் ஆவார்.

(iii) பயணத்தின் நோக்கங்களும் அறிவியல் சார்ந்த கவனமும்

- தென் துருவம்: இந்தியாவின் Chandrayaan-1 விண்கலம் நிலவில் பனிக்கட்டிகள் இருப்பதை உறுதி செய்ததைத் தொடர்ந்து, நிலவின் தென் துருவத்தில் மனிதர்களைத் தரையிறக்கி, அங்குள்ள உறைந்த நீரை ஆய்வு செய்ய NASA திட்டமிட்டுள்ளது.
- வளங்களைப் பயன்படுத்துதல்: நிலவில் உள்ள இந்தப் பனிக்கட்டிகள் மிகவும் முக்கியமானவை; இவற்றை உருக்கி குடிநீராகப் பயன்படுத்தலாம் அல்லது பிரித்தெடுத்து சுவாசிப்பதற்கான ஆக்சிஜனையும், ராக்கெட் எரிபொருளுக்கான ஹைட்ரஜனையும் உருவாக்கலாம்.
- சூரிய ஆற்றல்: நிலவின் தென் துருவத்தில் உள்ள சில உயரமான பகுதிகள் தொடர்ந்து சூரிய ஒளியைப் பெறுகின்றன; இந்த ஒளியைப் பயன்படுத்தி விண்வெளி வீரர்களுக்குத் தேவையான சூரிய மின்சாரத்தை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- நீண்டகால இலக்கு: நிலவில் மனிதர்களின் நிலையான இருப்பை ஏற்படுத்துவதும், எதிர்கால ஆழமான விண்வெளி ஆய்வுகளுக்காக Orion விண்கலத்தின் புதிய தொழில்நுட்பங்களைச் சோதித்துப் பார்ப்பதும் இப்பயணத்தின் முதன்மையான நோக்கங்களாகும். (iv) தொழில்நுட்ப விவரக்குறிப்புகள்
- SLS ராக்கெட்: இந்தத் திட்டம், உலகின் மிகவும் சக்திவாய்ந்த ராக்கெட்டான 'விண்வெளி ஏவுதல் அமைப்பை' (Space Launch System - SLS) பயன்படுத்துகிறது. இது 322 அடி உயரம் கொண்டது

(சுமார் 30 தளங்கள் கொண்ட கட்டிடத்திற்குச் சமம்) மற்றும் 8.8 மில்லியன் பவுண்டுகள் உந்துவிசையை உருவாக்குகிறது; இது 'Saturn V' ராக்கெட்டை விட 15% அதிக சக்தி வாய்ந்தது.

- Orion விண்கலம்: சுமார் 11 லட்சம் கிலோமீட்டர் தூரத்தை (திரும்பும் பயணத்தையும் சேர்த்து) கடக்கும் வகையில், 10 நாட்கள் பயணத்திற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு நவீன விண்கலம் இது.
- வேகம்: இந்த ராக்கெட், Orion விண்கலத்தை மணிக்கு 39,400 கி.மீ வேகத்தில் நிலவை நோக்கிச் செலுத்தும். பூமிக்குள் மீண்டும் நுழையும்போது, விண்கலமானது மணிக்கு 40,000 கி.மீ வேகத்தில் பயணிக்கும்.

(v) திட்டத்தின் முன்னேற்றமும் திரும்புதலும்

- தயாரிப்புப் பணிகள்: விண்வெளி வீரர்கள் 18 மாதங்கள் தீவிரப் பயிற்சியைப் பெற்றுள்ளனர்; இதில் அவசர காலச் சூழல்களைச் சமாளிப்பதற்கான கணினி வழிப் பயிற்சிகளும், ஈர்ப்புவிசையற்ற நிலையை (எடையின்மையை) உருவகப்படுத்தும் வகையில் பிரம்மாண்டமான நீச்சல் குளங்களில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகளும் அடங்கும்.
- தரையிறங்கும் செயல்முறை: பாதுகாப்பாகத் திரும்புவதற்காக, விண்கலத்தின் வேகத்தை மணிக்கு 40,000 கி.மீ-லிருந்து வெறும் 30 கி.மீ-ஆகக் குறைக்கும் வகையில், தொடர்ச்சியான பாராசூட்டுகள் (குடைகள்) விரிவடையும்.
- நீரில் தரையிறங்குதல் (Splashdown): Orion விண்கலம், கலிபோர்னியா கடற்கரைக்கு அருகிலுள்ள பசிபிக் பெருங்கடலில் தரையிறங்கத் திட்டமிடப்பட்டுள்ளது; அங்கு விண்கலத்தை மீட்கும் பணிக்காக அமெரிக்கக் கடற்படை மற்றும் NASA குழுக்கள் தயார் நிலையில் காத்திருக்கும்.

(vi) எதிர்காலத் திட்ட வரைபடம்

- Artemis III (2027): Artemis II திட்டத்தில் விண்வெளி வீரர்கள் நிலவின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாகப் பயணித்ததைத் தொடர்ந்து, 2027-ஆம் ஆண்டில் மனிதர்களை நிலவின் மேற்பரப்பில் தரையிறக்க NASA திட்டமிட்டுள்ளது